## சுருக்கம்

அறிவிப்புகள் - 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 3 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை கிராமப்புறங்களில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் பொருட்டு பெற்றோர்களது ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.72,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை**

**அரசாணை (நிலை) எண். 69**

நாள் 18.11.2021
பிலவ, கார்த்திகை 2
திருவள்ளுவர் ஆண்டு 2052

25 NOV 2021

படிக்கப்பட்டது :-

1. அரசாணை (நிலை) எண்.56, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) துறை, நாள் 26.09.2017.
2. 2021- 22 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானியக்கோரிக்கை எண்.9-ல், புதிய அறிவிப்பு எண்.20, நாள்.08.09.2021.
3. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் அவர்களின் ந.க.எண்.டி1/2123/2021, நாள் 16.09.2021.

**ஆணை:-**

2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "கிராமப்புறத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின் தங்கிய மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் அதிக எண்ணிக்கையில் பயனடையும் வகையில், கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்ச வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இதுதொடர்பான தற்போதைய மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பெறப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவில், கிராமப்புற பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின்

ஆண்டு வருமான உச்ச வரம்பானது, ரூ.72,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு நான்காண்டு காலம் ஆகியுள்ள நிலையில், தற்போது ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ. 72,000/- இல் இருந்து ரூ.1,00,000/- என உயர்த்தி வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, கிராமப்புறங்களில் 3-ஆம் வகுப்பு முதல் 6ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியருக்கான கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.72,000/-லிருந்து ரூ.1,00,000/-ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நல ஆணையர், சென்னை-5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்)
மாநில கணக்காயர், (தணிக்கை-1), சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காயர், (தணிக்கை-2), சென்னை-18 (பெயரில்)

நகல் :-
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர்
அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை -9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை - 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/2021
பிரிவு அலுவலர்.

18/11/21